## உச்சநீதிமன்றம் வழங்கிய வரலாற்று முத்திரை பதித்த தீர்ப்பு, இந்திய ஒன்றியத்தில் உள்ள

# அனைத்து மாநிலங்களுக்கும் புதிய விடியலை உருவாக்கியுள்ளது!

**08.04.2025**ல் இந்திய உச்சநீதிமன்றத்தினுடைய அரசியல் சட்டத்தின் 142வது பிரிவின் கீழ் வழங்கப்பட்ட தீர்ப்பின் மூலம், தமிழக ஆளுநர் ஆர்.என். ரவி அவர்களால் கால தாமதப்படுத்தி, நிறுத்தி வைக்கப்பட்டதும், தமிழ்நாடு சட்டசபையால் நிறைவேற்றப்பட்டதுமான 10 மசோதாக்கள் சட்ட வடிவம் பெறும் எனத் தீர்ப்பளித்தது மட்டுமல்லாமல், தமிழ்நாடு ஆளுநருக்கும், இந்தியக் குடியரசுத் தலைவருக்கும் சட்டமன்றங்களால் நிறைவேற்றப்பட்டு ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கப்படும் மசோதாக்களை உச்சபட்சமாக 3மாத காலக் கெடுக்குள் மசோதாக்கள் மீதான தங்களுடைய முடிவை தெரிவிக்க வேண்டுமென கால நிர்ணயம் செய்து தீர்ப்பு வழங்கியுள்ளது.

உச்ச நீதிமன்றத்தினுடைய இந்தத் தீர்ப்பு, இந்திய ஒன்றியத்திலுள்ள அனைத்து மாநிலங்களுக்கும் பொருந்தும் வகையில் அமைந்துள்ளது. இனி, எதிர்வரும் காலங்களில் இந்திய ஒன்றியத்திலுள்ள எந்த ஒரு மாநிலமானாலும் தொடர்புடைய சட்டமன்றம் மசோதாக்களை நிறைவேற்றி, ஆளுநரின் ஒப்புதலுக்காக அனுப்பப்படும் மசோதாக்களை தொடர்புடைய ஆளுநர்களும், குடியரசுத் தலைவரும் உச்சபட்சமாக 3 மாத கால கெடுவிற்குள், இறுதி முடிவுகளைத் தொடர்புடைய மாநில அரசுகளுக்குத் தெரிவிக்க வேண்டுமென்ற உறுதியான காலவரையறை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. எனவே, இனி தமிழ்நாடு மட்டுமல்லாமல், இந்திய ஒன்றியத்திலுள்ள அனைத்து மாநிலங்களும் இந்தத் தீர்ப்பின் மூலம் பயனடையும் வகையில் அவசியமில்லாத கால விரயம் தடுக்கப்படும், சட்டத்தின் பாதுகாப்பும், திட்டத்தின் பயனும் உடனடியாக மாநில மக்களுக்குக் கிடைக்கும் என்பதை இந்த உச்சநீதிமன்றத்தினுடைய திருப்புமுனைத் தீர்ப்பு உறுதி செய்துள்ளது என்பதில் வேறு கருத்துகளுக்கு இடமில்லை. உச்சநீதிமன்றத்தினுடைய இந்தத் தீர்ப்பை பாராட்ட வேண்டிய இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர் பாராட்டுவதற்கு மனமின்றி, இந்தத் தீர்ப்பின் தாக்கத்தைச் சரியாகப் புரிந்து கொள்ளாமல், தவறாக விமர்சிக்கிறார். இந்தியக் குடியரசுத் தலைவருக்கு, உச்சநீதிமன்றம் எப்படி தங்களது தீர்ப்பின் மூலம் அறிவுறுத்த முடியும் அல்லது வழிகாட்ட முடியும் என்ற கேள்வியினை எழுப்பி, ஜனநாயக அமைப்பில் நாடாளுமன்றம்தான் உச்சபட்ச அதிகாரம் படைத்ததேயல்லாமல், மாறாக உச்ச நீதிமன்றம் அல்ல என்றும் வாதாடுகிறார். இந்தியத் குடியரசுத் துணைத் தலைவரின் இந்த வாதுரை என்பது அவரது தவறான புரிதலையே வெளிப்படுத்துகிறது.

இந்திய அரசியல் சட்டத்தின் மீது எத்தகைய பொறுப்புகளில் இருப்பவராயினும் முறைகேடாக தாக்குதல்கள் நடத்தினாலும், அத்தகைய தாக்குதல்கள் அரசியல் சட்டத்தை உருக்குலைக்குமானால் அல்லது அரசியல் சட்டத்தின் பிரிவுகளுக்கு தவறான விளக்கமளித்து விமர்சிக்கப்படுமானால், உச்ச நீதிமன்றம் தானே முன்வந்து தலையிட்டு, அத்தகைய நடவடிக்கைகளைத் தடுப்பதற்கான உரிமை உச்சநீதிமன்றத்திற்கு உண்டு என்பதை யாராலும் மறுக்கவியலாது.

இந்திய அரசியல் சட்டத்தை சீர்குலைக்கும் நடவடிக்கையில் யார் ஈடுபட்டாலும், அதனைத் தடுப்பதற்கான நடவடிக்கையை உச்சநீதிமன்றமே தன்முயற்சியாக(Suo moto) ஈடுபடலாம் என்ற உரிமையும் உச்சநீதிமன்றத்திற்கு உண்டு.

இந்தியக் குடியரசு துணைத் தலைவர் தெரிவித்திருப்பதைப் போல உச்ச நீதிமன்றத்தினுடைய தீர்ப்பு குடியரசுத் தலைவருக்கு கட்டுப்பாடு விதிக்கின்ற அல்லது நெறிமுறைப் படுத்துகின்ற தீர்ப்பு என்று கருதாமல், ஒரு மாநிலத்தின் ஆளுநர் அந்த மாநில மக்களுடைய எண்ணங்களையும், அபிலாசைகளையும் நிறைவேற்றிடும் வகையில், அந்த மாநில மக்களின் பிரதிநிதித்துவ சபையான சட்டமன்றத்தில் நிறைவேற்றி, அனுப்பப்பட்ட மசோதாக்களை தொடர்புடைய மாநில ஆளுநர் காலதாமதப்படுத்துவதும், அந்த ஆளுநர் மூலம் குடியரசுத் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்ட மசோதாக்களை காலதாமதப்படுத்துவதன் மூலம் அந்த மாநில மக்களின் நலன்கள் பெரிதும் பாதிக்கப்படுகிறது என்பதை இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர் சிந்திக்க தவறிவிட்டார்.

குறிப்பாக, தமிழ்நாட்டினுடைய ஆளுநர் ஆர்.என்.ரவி தமிழக சட்டமன்றத்தால் நிறைவேற்றி அனுப்பப்பட்ட மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்காமல், ஆண்டு கணக்கில் தாமதப்படுத்தியதோடு, கால தாமதம் என்பது நிராகரிக்கப்பட்டது என்று தான் பொருள் கொள்ள வேண்டும் என்று விளக்கமும் சொன்னார். தமிழக அரசின் சார்பில் இத்தகைய காலதாமதம் குறித்து குடியரசுத் தலைவருக்கு எடுத்துரைத்தும் பயனேதும் இல்லாத இக்கட்டான சூழ்நிலையில்தான், மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டிய கடமையின் காரண மாக வேறு வழியின்றி தமிழ்நாடு அரசு உச்சநீதிமன்றத்தை அணுக வேண்டிய சூழ்நிலை உருவானது.



**பொன். முத்துராமலிங்கம்**
முன்னாள் அமைச்சர்,
கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர்

எனவே, குடியரசுத் துணைத் தலைவர் எத்தகைய நெருக்கடியான சூழ்நிலையில், எவ்வளவு காலம் பொறுத்திருந்து, மக்களின் அத்தியாவசிய தேவைகளையும், கோரிக்கைகளையும் நிறைவு செய்வதற்காக உச்ச நீதிமன்றத்தை தமிழ்நாடு அரசு அணுகியிருக்கிறது என்பதை குடியரசுத் துணைத் தலைவர் எண்ணிப் பார்க்கத் தவறிவிட்டார்.

இந்த வழக்கில், உச்ச நீதிமன்றம் இந்தத் தீர்ப்பை வழங்காவிட்டால், தமிழ்நாடு மக்கள் பிரதிநிதித்துவ சபையான சட்டமன்றத்தில் நிறைவேற்றி அனுப்பப்பட்ட மசோதாக்களின் நிலை என்ன? என்பதற்கு குடியரசுத் துணைத் தலைவர் எந்த விளக்கமும் தரவில்லை. எனவே, இந்த வழக்கில் உச்ச நீதிமன்றம் இந்தத் தீர்ப்பை வழங்கவில்லையானால், தமிழக மக்களுடைய நலன் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கும் என்பதை குடியரசுத் துணைத் தலைவருக்கு தமிழ் நாட்டு மக்கள் சார்பாக சுட்டிக்காட்ட விரும்புகிறோம். மேலும், குடியரசுத் துணைத் தலைவர் தெரிவித்திருப்பதைப் போல நாடாளுமன்றம்தான் உச்சபட்ச அதிகாரம் படைத்தது என்பது இங்கு விவாதப் பொருள் அல்ல. எனவே, இங்கு நாடாளுமன்றத்தின் அதிகாரவரம்பையும், உச்ச நீதிமன்றத்தின் அதிகாரவரம்பையும் ஒப்பிட்டுப் பேச வேண்டிய அவசியமோ, நிர்பந்தமோ ஏற்படவில்லை.

மேலும், உச்ச நீதிமன்றம் இந்திய அரசியல் சட்டத்தின் 142வது பிரிவின்படி, வழங்கப்பட்டுள்ள சிறப்பு அதிகாரத்தை அவசியத்தின் அடிப்படையில் சரியாகப் பயன்படுத்தியிருக்கிறதா? என்பதுதான் முக்கியமான ஆம்! பொருத்தமான கேள்வியாக இருக்க முடியும்! சட்டப்படியும், இயற்கை நியதிப்படியும், மக்களின் உணர்வுகளையும், மக்கள் பிரதிநிதித்துவ சபையான மாநில சட்டமன்ற உரிமைகளையும் பாதுகாக்கும் வகையில் உச்சநீதிமன்றம் அளித்த தீர்ப்பு என்பது சட்ட வல்லுனர்களாலும், பத்திரிக்கை திறனாய் வாளர்களாலும், அனைத்து மக்களாலும் பாராட்டி வரவேற்கத்தக்க தீர்ப்பாக மதிப்பீடு செய்கிறார்கள்.

இந்தத் தீர்ப்பின் மூலம் குறிப்பாக எதிர்க்கட்சிகள் ஆட்சியினருக்கும், மாநில பொறுப்பிலிருக்கும் ஆளுநர்களுக்கு சரியான வழிகாட்டும் வழித்தடமாக அமையும் என்பதில் கிஞ்சிற்றும் ஐயமில்லை. இந்திய அரசியல் சட்டத்தினை வார்ப்பித்து வழங்கிய பாபாசாகிப் அம்பேத்கர் அவர்கள் இந்திய அரசியல் சட்ட அமலாக்கம் குறித்து தொலைநோக்குப் பார்வையும், என்றும் நிலைத்து நின்று வழிகாட்டும் ஓர் கருத்தினை முன்வைத்தார். “இந்த அரசியல் சட்டம், போர்க்காலமாக இருப்பினும், அமைதியான காலமாக இருப்பினும், இந்தியாவை ஒற்றுமையுள்ள இந்திய ஒன்றியமாக வைத்துக் கொள்ளும் அளவிற்கு இலகுவானதாகவும், கடுமையானதாகவும் இருக்கும்” என்று நான் கருதுகிறேன். ஆனால், அரசியல் சட்ட அமலாக்கத்தில் தவறுகளும், தடைகளும் உருவாகுமானால், அதற்கான காரணம் அரசியல் சட்டம் அல்ல, மாறாக அரசியல் சட்டத்தை அமல்படுத்துபவர்களின் கோரமான சிந்தனை தான் காரணமாகும் எனத் தெளிவுபடுத்தியுள்ளார்.

(I feel that the Constitution is workable, it is flexible and it is strong enough to hold the country together both in peacetime and in wartime. Indeed, if I may say so, if things go wrong under the new Constitution, the reason will not be that we had a bad Constitution. What we will have to say is that Man was vile.” Dr B.R. Ambedkar)

இந்திய அரசியல் சட்டத்தில் 142வது பிரிவின்படி சிறப்பு அதிகாரம் உச்சநீதிமன்றத்திற்கு வழங்கவில்லை என்று நாம் அனுமானிப்போமானால், எண்ணிக்கை பலத்தின் அடிப்படையில், எண்ணங்களின் நியாயங்கள் பற்றி சிந்திக்காமல், ஜனநாயகத்தில் ஒரு சர்வாதிகாரம் உருவாவதற்கான வாய்ப்பு உருவாகும் என்பதை யாராலும் மறுக்கவியலாது. குடியரசுத் துணைத் தலைவருக்கு அரசியல் சட்டத்தின் மீது நம்பிக்கை முழுமையாக இருக்குமானால், அரசியல் சட்டத்தின் 142ன் படி வழங்கப்பட்ட உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பை மதிக்க வேண்டும். அதுமட்டுமல்ல, இந்திய அரசியல் சட்டத்தின் அடிப்படையில்தான் ஜனநாயக முறையில், நாடாளுமன்றம், சட்டமன்றங்கள், நீதிமன்றங்கள், குடியரசுத் தலைவர், துணைத் தலைவர் எனப் பொறுப்புகள் உருவாக்கப்பட்டுள்ளது. குடியரசுத் தலைவரால் பணியமர்த்தப்பட்ட தமிழ்நாடு ஆளுநர் சட்டப்படி தன்பணியை தொடர்ந்திருப்பா ரேயானால், தமிழ்நாடு அரசு உச்சநீதிமன்றத்தை நாடியிருக்கவேண்டிய அவசியமில்லை அல்லது குடியரசுத் தலைவரே ஆளுநர் ரவியை அப்பொறுப்பிலிருந்து அப்புறப்படுத்தியிருந்தால் இந்தக் கால விரயம் ஏற்பட்டிருக்காது.

எனவே, இனியாவது குடியரசுத் துணைத் தலைவர் நியாயங்களைப் புரிந்து கொண்டு பிரச்சினைகளுக்கு ஒட்டுமொத்த காரணமான தமிழ்நாடு ஆளுநர் ரவியை உடன் அப்புறப்படுத்தி, அரசியல் சட்டத்தையும், ஜனநாயகத்தையும், கூட்டுறவு கூட்டாட்சியையும் காப்பாற்றும் முயற்சியில் ஈடுபட வேண்டு மேயல்லாமல், தொடர்பில்லாத பிரச்சினைகளை முன்னிலைப் படுத்தி மேலும் குழப்பத்தையும், குதற்கத்தையும் உருவாக்க வேண்டாம் என்பதுதான் தமிழ் நாட்டு மக்களின் வேண்டுகோளும், விருப்பமும் ஆகும்.

இந்திய குடியரசுத் துணைத் தலைவர் மேலும் விளக்கம் பெறவிரும்பினால் 26.04.2025ம் தேதியில் வெளியான இந்தியன் எக்ஸ்பிரஸ் (The New Indian Express, Date: 26.04.2025) பத்திரிக்கையின் தலையங்கப் பகுதியில் உச்ச நீதிமன்றத்தின் வழக்கறிஞர் காளீஸ்வரம்ராஜ் இதுகுறித்துத் தீட்டிய ஆங்கில கட்டுரையின் இறுதிப் பகுதியில் உச்ச நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பு குறித்து ஆகப் பொருத்தமான விளக்கத்தை மேற்கோள்களுடன் கொடுத்துள்ளார். அந்த விளக்கமே தமிழ் நாட்டின் ஆளுநர் ரவி அவர்களுக்கும், குடியரசுத் துணைத் தலைவருக்கும் சரியான விளக்கமாகவும், வெளிச்சமாகவும் வழிகாட்டும் என நம்புகிறேன்.

(Alexander Hamilton, one of the drafters of the US Constitution, famously described the judiciary as the ‘least dangerous’ branch, hinting at the more dangerous executive. When a high constitutional functionary criticises the highest court and its directives, and the text of constitutional provisions based on the idea of checks and balances, it sends an unpleasant message to our democracy. No individual is above the law under our constitutional scheme.The judgement in the Tamil Nadu case underscores this democratic principle.)

## இஸ்ரோ முன்னாள் தலைவர்

# கஸ்தூரி ரங்கன் மறைவு!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஏப்.27-

இஸ்ரோ முன்னாள் தலைவர் கஸ்தூரிரங்கன் மறைவையொட்டி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:-

இஸ்ரோ முன்னாள் தலைவர் பத்ம விபூஷன் கஸ்தூரிரங்கன் அவர்களின் மறைவுச் செய்தி அறிந்து வருந்தினேன்.

விண்வெளி ஆய்வில் இந்தியா மிகப் பெரும் உயரங்களை அடைவதற்கு வித்திடும் வகையில் பணியாற்றியவர் திரு. கஸ்தூரிரங்கன் அவர்கள். மிகச் சிறந்த அறிவியலாளராக இருந்ததோடு மட்டுமில்லாமல், மாநிலங்களவை உறுப்பினர், திட்டக்குழு உறுப்பினர், டெல்லி ஜவகர்லால் நேரு பல்கலைக்கழக வேந்தர் எனப் பல உயர்நிலைகளிலும் தனது அறிவாற்றலால் அப்பொறுப்புகளுக்கு அவர் பெருமை சேர்த்துள்ளார்.

அன்னாரை இழந்து வாடும் குடும்பத்தினருக்கும், நண்பர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

## சேலம் மாவட்டத்தில் பட்டாசு விபத்து!

# உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா ரூ.3 லட்சம் நிதி!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, ஏப்.27-

சேலம் மாவட்டம், காடையாம்பட்டி வட்டம், கஞ்சநாயக்கன்பட்டி கிராமத்தில் பட்டாசு வெடித்து உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவியினை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

இது குறித்து தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது:-

சேலம் மாவட்டம், காடையாம்பட்டி வட்டம், கஞ்சநாயக்கன்பட்டி கிராமம், பூசாரிப்பட்டி பேருந்து நிறுத்தம் அருகில் நேற்று முன்தினம் (25.4.2025) இரவு சுமார் 8.50 மணியளவில் கஞ்சநாயக்கன்பட்டி திரௌபதி அம்மன் கோவில் திருவிழாவை முன்னிட்டு இருசக்கர வாகனத்தில் பட்டாசு மூட்டையை எடுத்துச்செல்லும்போது எதிர்பாராதவிதமாக பட்டாசு தீப்பிடித்து வெடித்ததில் கஞ்சநாயக்கன்பட்டி, கொட்டமேடுவைச் சேர்ந்த செல்வராஜ் (வயது 29), குருவாலியூரைச் சேர்ந்த சிறுவர்கள் செல்வன். தமிழ்செல்வன் (வயது 11) த/பெ. சேட்டு மற்றும் செல்வன். கார்த்தி (வயது 11) த/பெ.சுப்பிர மணி ஆகிய மூன்று நபர்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

மேலும், இவ்விபத்தில் பலத்த காய மடைந்து சேலம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்த கொட்ட மேடு வைச் சேர்ந்தலோகேஷ் (வயது 20) த/பெ.தங்கராஜ் என்பவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகுந்த அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன்.

இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும் அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா மூன்று இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன் என அறிவித்துள்ளார்.

இவ்வாறு தமிழ்நாடு அரசின் செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### வே.இ. நாகூர்மீரான்
### ஏப்ரல் 27 (2008)



நீதிக்கட்சியில் இணைந்து, பின்னர் திராவிடர் கழகத்தில் பணியாற்றி, கழகம் துவங்கிய பின்பு, அதில் தன்னை இணைத்துக் கொண்டு பணியாற்றியவர்.

ஒருங்கிணைந்த நெல்லை மாவட்ட துணைச் செயலாளர், மேலப்பாளையம் நகரச் செயலாளர் என பல பொறுப்பு வகித்து அப்பகுதியில் கழகம் வளர்த்தவர்.

நெல்லை மாநகராட்சி உறுப்பினராகவும், மண்டலக்குழு தலைவராகவும், மேலப்பாளையம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி தலைராகவும் பொறுப்பு வகித்தவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் பிறந்தநாள் - ‘தமிழ்வார விழா!’

# முதல்வருக்கு மதுரை அய்யன் திருவள்ளுவர் இலக்கிய மன்றம் நன்றி!

### மன்ற செயலாளர் க.வை.இராமகிருட்டிணன் அறிக்கை

சென்னை, ஏப்.27-

மதுரை அய்யன் திருவள்ளுவர் இலக்கியமன்ற செயலாளர் க.வை.இராமகிருட்டிணன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

திராவிடப் போராளி புரட்சிக்கவிஞரின் பிறந்தாளினை தமிழ் வார அரசு விழா” வாகக் கொண்டாடப்படும் என்று அறிவித்த திராவிட மாடல் முதலமைச்சர் அவர்களுக்கு அய்யன் திருவள்ளுவர் இலக்கிய மன்றம் நன்றி !

பேரறிஞர் அண்ணா அவர்களால் 1946 ஆம் ஆண்டே பொற்கிழி வழங்கி புகழ்ந்துரைத்து “புரட்சிக்கவிஞர்”என்ற பட்டத்தினை பெற்றவர் பாரதி தாசன் ஆவார்.

பாளைச் சிரிப்பு பசு நெய்யின் நறுமணம் வாளை மீன் துள்ளல் வரிப் புலியின் கனல் பார்வை எல்லாமே இணைந்திட்டக் “கவிதைச் சுரங்கம்” என்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் புகழப்பட்ட திராவிடப் போராளி புரட்சிக் கவிஞரின் பிறந்த நாளினை “தமிழ் வார விழா” வாக கொண்டாடப் படும் என அறிவித்த தமிழ் நாடு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்குதமிழ்கூறும் நல்லுலகம் சார்பில் அய்யன் திருவள்ளுவர் இலக்கிய மன்றம் நன்றியினை மகிழ்ந்து தெரிவித்துக்கொள்கிறது.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

---

## கிருஷ்ணகிரி மாவட்ட தொ.மு.ச. சார்பில்

# ஓசூரில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் முப்பெரும் விழா!

### மு.சண்முகம் எம்.பி.- ஒய்.பிரகாஷ் எம்.எல்.ஏ.- தே.மதியழகன் எம்.எல்.ஏ. -பங்கேற்பு!


கிருஷ்ணகிரி, ஏப்.27-

கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டம் ஓசூரில் தொ.மு.ச. மாவட்ட கவுன்சில் சார்பில் தலைவர் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா மற்றும் முதல்வர் தளபதியார் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு நலத்திட்ட உதவிகள் ஆனந்த் கிராண்ட் பேலஸில் இன்று (27.4.2025) காலை 10 மணியளவில் நடைபெற உள்ளது. நலத்திட்ட உதவிகள் விழாவிற்கு தொ.மு.ச. கவுன்சில் செயலாளர் கோபாலகிருஷ்ணன் தலைமை நடைபெற உள்ள விழாவில் தொ.மு.ச. பேரவை துணைத்தலைவர் கிருஷ்ணன் வரவேற்புரை ஆற்றுகிறார்.

சின்னசாமி, சேகர், பத்மம்மா, பசவராஜ்,கிருஷ்ணமூர்த்தி, ஜேக்கப் ராஜ், மோகன், யசோதா, வெங்கடாசாமி, ரவீந்திரன், ஜெய் சங்கர், கோவிந்தராஜ்,சிவ வடிவேல், ரகு, குமார், கிருஷ்ணன், குணசேகரன், சிவக்குமார், சங்கர், ஷாலினி, வேலு, முத்து சாமி, முருகேஷ் மற்றும் பலர் பங்கேற்கின்றனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### எம். கோபாலகிருஷ்ணன்
### ஏப்ரல் 27 (2009)



திருச்சி மாவட்டம், மணப்பாறை நகரத்தில், கழக வளர்ச்சிக்கு பாடுபட்டவர்களில் இவரும் ஒருவர்.

பத்தாண்டுகளுக்கும் மேலாக நகரக் கழகச் செயலாளராகவும், நகர்மன்ற உறுப்பினராகவும், பின்னர் துணைத் தலைவராகவும், இரு முறை நகர்மன்றத் தலைவராகவும் பணியாற்றி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

தலைமைக் கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர். குறிப்பாக, 1965ஆம் ஆண்டு இந்தி எதிர்ப்பு போராட்டத்தில் பங்கேற்று சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**